| எண் No. | அதிகாரம் (Adhikaram) | குறள் (Kural) | பொருள் (Meaning) |
|---|---|---|---|
| 1 | **அறன் வலியுறுத்தல்** | ஒல்லும் வகையான அறவினை ஓவாதே<br>செல்லும்வாய் எல்லாஞ் செயல் | செய்யக்கூடிய அறச்செயலை இடைவிடாமல் இயன்ற மட்டும் எல்லா இடங்களிலும் போற்றிச் செய்ய வேண்டும். |
| 2 | **அறன் வலியுறுத்தல்** | மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்<br>ஆகுல நீர பிற | மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை ஆரவாரம் மட்டுமே. |
| 3 | **அறன் வலியுறுத்தல்** | அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்ற தறம் | பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் எனும் நான்கையும் விலக்கி இருப்பதே அறம். |
| 4 | **அறன் வலியுறுத்தல்** | அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்<br>புறத்த புகழும் இல | அறவழி வாழ்க்கையால் வருவதே இன்பம். அதற்கு மாறாக வருவது இன்பம் ஆகாது; புகழும் ஆகாது. |
| 5 | **அன்புடைமை** | அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்<br>புண்கணீர் பூசல் தரும் | அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பத்தைக் காணும்போது சிந்தும் கண்ணீரில், அது வெளிப்பட்டுவிடும். |
| 6 | **அன்புடைமை** | அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்<br>என்பும் உரியர் பிறர்க்கு | அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவர் தம் உடைமை அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர். |
| 7 | **அன்புடைமை** | அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்<br>நண்பென்னும் நாடாச் சிறப்பு | அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் பற்றுள்ளம் தரும். அது நட்பு எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும். |
| 8 | **அன்புடைமை** | அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு<br>என்புதோல் போர்த்த உடம்பு | அன்பு வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்; இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும். |
| 9 | **இனியவை கூறல்** | இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்<br>செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் | ஒருவர் கூறும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல்லாகும். |
| 10 | **இனியவை கூறல்** | அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து<br>இன்சொலன் ஆகப் பெறின் | முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதை விட நல்லதாகும். |
| 11 | **இனியவை கூறல்** | பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு<br>அணியல்ல மற்றுப் பிற | அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் ஒருவனுக்கு அணிகலனாகும். மற்றவை அணிகள் அல்ல. |
| 12 | **இனியவை கூறல்** | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று | இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்துக் கடுமையாகப் பேசுவது, கனியை ஒதுக்கிக் காயைத் தின்பது போலாகும். |
| 13 | **செய்ந்நன்றியறிதல்** | செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்<br>வானகமும் ஆற்றல் அரிது | தான் ஓர் உதவியும் செய்யாதிருக்க, பிறர் தனக்கு செய்த உதவிக்கு, இந்த வானமும் பூமியும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடாக முடியாது. |
| 14 | **செய்ந்நன்றியறிதல்** | பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்<br>நன்மை கடலின் பெரிது | என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது. |

| | | | |
|---|---|---|---|
| 15 | **செய்ந்நன்றியறிதல்** | தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்<br>கொள்வர் பயன்தெரி வார் | தினை அளவாக மிகச் சிறிய உதவியே செய்த போதிலும் அதன் பயனை நன்கு அறிந்தவர் அதைப் பனை அளவு மிகப் பெரிய உதவியாய் போற்றுவர். |
| 16 | **செய்ந்நன்றியறிதல்** | மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க<br>துன்பத்துள் துப்பாயார் நட்பு | குற்றமற்றவரின் உறவை மறக்கவும் கூடாது; துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது. |
| 17 | **அடக்கம் உடைமை** | செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்<br>தாற்றின் அடங்கப் பெறின் | அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடக்கமாக வாழ்ந்தால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு பெருமையைக் கொடுக்கும். |
| 18 | **அடக்கம் உடைமை** | நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்<br>மலையினும் மாணப் பெரிது | தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடக்கத்துடன் வாழ்பவனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும். |
| 19 | **அடக்கம் உடைமை** | ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்<br>எழுமையும் ஏமாப் புடைத்து | ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாக அமையும். |
| 20 | **அடக்கம் உடைமை** | ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்<br>நன்றாகா தாகி விடும் | ஒருவன் பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லாக இருந்து துன்பம் விளைவிக்குமானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போகும். |
| 21 | **ஒழுக்கம் உடைமை** | ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்<br>உயிரினும் ஓம்பப் படும் | ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும். |
| 22 | **ஒழுக்கம் உடைமை** | அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை<br>ஒழுக்க மிலான்கண் உயர்வு | பொறாமையுடையவனுக்கு செல்வம் இல்லாதது போல், ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லை. |
| 23 | **ஒழுக்கம் உடைமை** | ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய<br>வழுக்கியும் வாயாற் சொலல் | தவறியும் தம் வாயால் தீய சொற்களைச் சொல்வது ஒழுக்கம் உடையவர்களிடம் இல்லாத பண்பாகும். |
| 24 | **பொறையுடைமை** | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை<br>இகழ்வார்ப் பொறுத்தல் தலை | தன்னைத் தோண்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை அவமதிப்பவரையும் பொறுப்பதே தலைசிறந்த பண்பாகும். |
| 25 | **பொறையுடைமை** | பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை<br>மறத்த லதனினும் நன்று | அளவுகடந்து பிறர் செய்யும் தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும்; அத் தீங்கை மறப்பது பொறுத்தலை விட நல்லது. |
| 26 | **பொறையுடைமை** | நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை<br>போற்றி யொழுகப் படும் | நிறைவான மனிதராக இருக்க வேண்டினால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும். |
| 27 | **அழுக்காறாமை** | ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்<br>தழுக்கா றிலாத இயல்பு | தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்ற வேண்டும் |
| 28 | **அழுக்காறாமை** | அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்<br>வழுக்கியுங் கேடீன் பது | பொறாமைக் குணம் உடையவர்க்கு வேறு பகையே வேண்டா; பொறாமையே அவர்களை வீழ்த்தி விடும். |

| | | | |
|---|---|---|---|
| 29 | **அழுக்காறாமை** | கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்<br>உண்பதூஉ மின்றிக் கெடும் | பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும். |
| 30 | **புறங்கூறாமை** | கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க<br>முன்னின்று பின்னோக்காச் சொல் | நேருக்கு நேராக ஒருவரது குறைகளைக் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம், ஆனால் நேரில் இல்லாதபோது, பின்விளைவை எண்ணாமல் அவரைப் பற்றிக் குறை கூறுவது தவறு. |
| 31 | **புறங்கூறாமை** | பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி<br>நட்பாடல் தேற்றா தவர் | இனிமையாகப் பேசி நட்பை வளர்க்கத் தெரியாதவர், புறங்கூறித் தம் நண்பர்களை இழந்து விடுவர். |
| 32 | **புறங்கூறாமை** | ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்<br>தீதுண்டோ மன்னு முயிர்க்கு | பிறர் குற்றத்தைக் காண்பவர்கள் தம் குற்றத்தையும் எண்ணிப் பார்த்தால், நிலைபெற்ற உயிர்க்குத் துன்பம் வராது. |
| 33 | **தீவினையச்சம்** | மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்<br>அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு | மறந்தும் பிறர்க்குத் தீமை செய்ய நினைக்கக் கூடாது; அப்படி நினைத்தால், அறம் அவனுக்குக் கேடு உண்டாக்கும். |
| 34 | **தீவினையச்சம்** | இலனென்று தீயவை செய்யற்க செய்யின்<br>இலனாகும் மற்றுப் பெயர்த்து | தன் ஏழ்மையைப் போக்கப் பிறர்க்குத் தீமை செய்யக்கூடாது, செய்தால் மேலும் ஏழை ஆகி வாட வேண்டியிருக்கும். |
| 35 | **தீவினையச்சம்** | எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை<br>வீயாது பின்சென் றடும் | எவ்வளவு பெரிய பகையைப் பெற்றவரும் தப்பித்துக் கொள்வர்; ஆனால் தீமை செய்வதால் வரும் பகையோ, அழியாமல் நம் பின் வந்து, நம்மை அழிக்கும். |
| 36 | **ஈகை** | வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்<br>குறியெதிர்ப்பை நீர துடைத்து | இல்லாதவர்க்கு வழங்குவதே ஈகைப் பண்பாகும். மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது. |
| 37 | **ஈகை** | அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்<br>பெற்றான் பொருள்வைப் புழி | வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும். |
| 38 | **ஈகை** | இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்<br>குலனுடையான் கண்ணே யுள | தமக்குள்ள வறுமைத் துன்பத்தைக் காட்டிக்கொள்ளாமல், பிறருக்கு ஈவது உயர்ந்த குடிப்பிறந்தவரின் பண்பாகும். |
| 39 | **புகழ்** | ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல<br>தூதிய மில்லை உயிர்க்கு | வறியவர்க்கு ஈதல் வேண்டும்; அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். இப்புகழன்றி மனித உயிர்க்குப் பயன் வேறு ஒன்றும் இல்லை. |
| 40 | **புகழ்** | புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை<br>இகழ்வாரை நோவ தெவன் | தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மீது வருந்தாமல், தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்வதேனோ? |
| 41 | **புகழ்** | வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்<br>எச்சம் பெறாஅ விடின் | தமக்குப் பிறகும் எஞ்சி நிற்கக் கூடிய புகழைப் பெறாவிட்டால், அது அந்த வாழ்க்கைக்கே வந்த பழியென்று உலகம் கூறும். |
| 42 | **வாய்மை** | தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்<br>தன்நெஞ்சே தன்னைச் சுடும் | ஒருவர் தன் மனமறிந்து பொய் சொல்லக்கூடாது; அப்படிச் சொன்னால், சொன்னவரின் மனமே அவரைத் தண்டிக்கும். |

| | | | |
|---|---|---|---|
| 43 | **வாய்மை** | மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு<br>தானஞ்செய் வாரின் தலை | உள்ளம் அறிய உண்மை பேசுபவன், தவமும் தானமும் செய்பவரைக் காட்டிலும் உயர்ந்தவன் ஆவான். |
| 44 | **வாய்மை** | பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை<br>எல்லா அறமுந் தரும் | பொய் சொல்லாமல் இருப்பது போலப் புகழ் தருவது இல்லை. அது அவன் அறியாமலேயே அவனுக்கு எல்லாப் புண்ணியங்களையும் தரும். |
| 45 | **இன்னா செய்யாமை** | கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா<br>செய்யாமை மாசற்றார் கோள் | சினங்கொண்டு சொல்லாலோ செயலாலோ ஒருவன் துன்பம் செய்த போதிலும் அவனுக்கு திரும்ப துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும். |
| 46 | **இன்னா செய்யாமை** | இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண<br>நன்னயஞ் செய்து விடல் | நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் நாணும் படியாக அவருக்கு நன்மை செய்வதுதான். |
| 47 | **இன்னா செய்யாமை** | அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்<br>தந்நோய்போற் போற்றாக் கடை | மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றா விட்டால், பெற்றுள்ள அறிவினால் எந்தப் பயனுமில்லை. |
| 48 | **கல்வி** | உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்<br>கடையரே கல்லா தவர் | செல்வர் முன் வறியவர் நிற்பது போல், கற்றவர் முன் விரும்பிப் பணிந்து நின்று கல்வி கற்றவரே உயர்ந்தவர்; கல்லாதவர் இழிந்தவர். |
| 49 | **கல்வி** | தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்<br>கற்றனைத் தூறும் அறிவு | தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். |
| 50 | **கல்வி** | கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு<br>மாடல்ல மற்றை யவை | கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும் அதற்கொப்பான சிறந்த செல்வம், வேறு எதுவும் இல்லை. |
| 51 | **அறிவுடைமை** | அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்<br>உள்ளழிக்க லாகா அரண் | அறிவு அழிவு வராமல் காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாக்கும் அரண், அறிவு ஒன்றுதான். |
| 52 | **அறிவுடைமை** | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு | எந்தக் கருத்தை எவர் சொன்னாலும், அக்கருத்தின் உண்மையைக் காண்பதுதான் அறிவு. |
| 53 | **அறிவுடைமை** | அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்<br>அஃதறி கல்லா தவர் | அறிவுடையார் நாளை வர இருப்பதை முன் அறிய வல்லவர்; அறிவு இல்லாதவரோ அதனை அறிய இயலாதவர். |
| 54 | **குற்றங்கடிதல்** | தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்<br>என்குற்ற மாகும் இறைக்கு | முதலில் தன் குற்றத்தைக் கண்டு விலக்கிப் பிறகு அடுத்தவர் குற்றத்தைக் காணும் ஆற்றல் மிக்க தலைவனுக்கு, குற்றம் ஏதும் வராது! |
| 55 | **குற்றங்கடிதல்** | குற்றமே காக்க பொருளாகக் குற்றமே<br>அற்றந் தரூஉம் பகை | குற்றம் புரிவது அழிவை உண்டாக்கக் கூடிய பகையாக மாறுவதால், குற்றம் புரியாமல் இருப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும். |
| 56 | **குற்றங்கடிதல்** | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்<br>வைத்தூறு போலக் கெடும் | குற்றம் நேர்வதற்கு முன்னமே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் நின்ற வைக்கோல் போர் போல் அழிந்துவிடும். |
| 57 | **ஊக்கம் உடைமை** | உள்ள முடைமை உடைமை பொருளுடைமை<br>நில்லாது நீங்கி விடும் | மன ஊறுதியே நிலையான உடைமை; மற்றப் பொருளுடைமையானது நிலையானதன்று. |

| | | | |
|---|---|---|---|
| 58 | **ஊக்கம் உடைமை** | ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா<br>ஊக்க முடையா னுழை | தளராத ஊக்கம் உள்ளவனிடம், செல்வமானது தானே அவனைத் தேடிச் சேரும். |
| 59 | **ஊக்கம் உடைமை** | வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்<br>உள்ளத் தனைய துயர்வு | நீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனித வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும். |
| 60 | **சொல்வன்மை** | ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்<br>காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு | ஆக்கமும் கேடும் சொல்லுகின்ற சொல்லால் வருவதால், எந்தவொரு சொல்லிலும் தவறு நேராமல் கவனமாக இருக்க வேண்டும். |
| 61 | **சொல்வன்மை** | கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்<br>வேட்ப மொழிவதாம் சொல் | கேட்போரைக் கவரும் தன்மையுடைதாகவும், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும். |
| 62 | **சொல்வன்மை** | சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை<br>வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து | தாம் சொல்லும் சொல்லை வெல்ல, வேறொரு சொல் இல்லை என்பதை அறிந்து சொல்லவேண்டும். |
| 63 | **நாடு** | தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்<br>செல்வருஞ் சேர்வது நாடு | குறையாத விளைபொருளும், சிறந்த பெருமக்களும், கேடில்லாத செல்வரும் சேர்ந்து வாழ்வதே நாடு. |
| 64 | **நாடு** | உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்<br>சேரா தியல்வது நாடு | பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடாகும். |
| 65 | **நாடு** | இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்<br>வல்லரணும் நாட்டிற் குறுப்பு | ஊற்றும் மழையும் மாகிய இருவகை நீர்வளமும், தக்கவாறு அமைந்த மலையும் அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும் வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புகளாகும். |
| 66 | **நட்பு** | நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்<br>மேற்சென் றிடித்தற் பொருட்டு | நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்காக அல்ல; நண்பர்கள் நல்வழி தவறிச் செல்லும்பொழுது இடித்துரைத்துத் திருத்துவதற்காகும். |
| 67 | **நட்பு** | முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்<br>தகநக நட்பது நட்பு | இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல; மனமார நேசித்துப் பழகுவதே உண்மையான நட்பாகும். |
| 68 | **நட்பு** | நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி<br>ஒல்லும்வாய் ஊன்றும் நிலை | நட்புக்கு சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும். |
| 69 | கூடா நட்பு | முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா<br>வஞ்சரை அஞ்சப் படும் | முகத்தால் இனிமையாகச் சிரித்துப் பழகி அகத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்பு கொள்வதற்கு அஞ்ச வேண்டும். |
| 70 | கூடா நட்பு | நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்<br>ஒல்லை உணரப் படும் | பகைவர், நண்பரைப்போல இனிமையாகப் பேசினாலும் அந்தச் சொற்களின் உண்மைத் தன்மையான சிறுமைக் குணம் வெளிப்பட்டே தீரும். |